செ. வெ. எண் : 405 04.07.2007

# செய்தி வெளியீடு

## அனைத்துப் பள்ளிகளிலும் ஒரே தரமான சமச்சீர் கல்விமுறை

## முதலமைச்சர் கலைஞர் அவர்களிடம் முன்னாள் துணைவேந்தர் முனைவர் முத்துக்குமரன் குழு அறிக்கை அளித்தது

> ‘அனைத்துப் பள்ளிகளிலும் ஒரே தரமான கல்வி வழங்கிடும் சமச்சீர் கல்வி முறையைத் தமிழக மக்கள் அனைவருக்கும் வழங்கிட வழி அமைப்போம்’

என தி.மு.கழகத்தின் தேர்தல் அறிக்கையில் தெரிவித்துள்ளவாறு, தமிழகத்தில் தற்போது செயல்பாட்டில் உள்ள பல்வேறு கல்வி முறைகளான நர்சரி கல்விமுறை, மெட்ரிகுலேஷன் கல்விமுறை, ஆங்கிலோ–இந்தியன் கல்விமுறை, ஓரியண்டல் கல்விமுறை, மாநில வாரியக் கல்விமுறை, ஆகியவற்றை ஆய்வு செய்து அனைத்துப் பள்ளிகளிலும் ஒரே தரமான கல்வி வழங்கும் சமச்சீர் கல்வி முறையை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக அரசுக்கு அறிக்கை அளித்திட 8.9.2006 அன்று பாரதிதாசன் பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணை வேந்தர் டாக்டர் முத்துக்குமரன் அவர்களின் தலைமையில் முதலமைச்சர் கலைஞர் அவர்களால் குழு ஒன்று அமைக்கப்பட்டது.

இக்குழுவில் தமிழ்நாடு நர்சரி, பிரைமரி, மெட்ரிகுலேஷன் மற்றும் உயர்நிலைப் பள்ளிகள் மேனேஜ்மென்ட் அசோசியேஷன் தலைவர் திரு. டி. கிறிஸ்துதாஸ், சேலம் மாவட்டம் ஏற்காடு மான்ட்போர்ட் பள்ளி நிர்வாகி பங்குத் தந்தை திரு. ஜார்ஜ், புதுக்கோட்டை நிஜாம் ஓரியண்டல் மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர் திரு. எஸ். காஜாமுகைதீன், கோவையைச் சேர்ந்த கல்வியாளர் டாக்டர் எஸ்.எஸ். இராஜகோபாலன், தொடக்கக் கல்வி இயக்குநர், மெட்ரிகுலேஷன் பள்ளிகள் இயக்குநர், அரசுத் தேர்வுகள் இயக்குநர் ஆகியோர் உறுப்பினர்களாகவும், பள்ளிக் கல்வி இயக்குநர் உறுப்பினர் செயலராகவும் நியமிக்கப்பட்டனர். இக்குழு, தமிழகம் முழுவதும் சென்று பல்வேறு வகைக் கல்வியாளர்கள், கல்வித் துறை அலுவலர்கள், பொதுமக்கள் ஆகியோரைச் சந்தித்து விரிவாக ஆய்வு செய்து, அவர்களின் கருத்துகளைத் திரட்டியது. அக்கருத்துகளின் அடிப்படையில் தமிழகத்தின் அனைத்துப் பள்ளிகளிலும் ஒரே தரமான சமச்சீர் கல்வி முறையைச் செயல்படுத்தும் வகையில் இக்குழு தயாரித்துள்ள பரிந்துரைகளுடன் கூடிய அறிக்கையினை முதலமைச்சர் கலைஞர் அவர்களிடம் இன்று (4.7.2007) வழங்கியது. இந்நிகழ்வின்போது, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் திரு. தங்கம் தென்னரசு, தலைமைச் செயலாளர் திரு. எல்.கே.திரிபாதி, இ.ஆ.ப., பள்ளிக் கல்வித் துறைச் செயலாளர் திரு. ம. குற்றாலிங்கம், இ.ஆ.ப., ஆகியோரும், இக்குழுவின் பிற உறுப்பினர்களும் உடனிருந்தனர்.

*******

வெளியீடு : இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை -9.